மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள பழமையான தொழிலான மரக் கடைசல் தொழிலைப் பாதுகாத்து அந்தப் பகுதியில் மேற்படி தொழில் புரிவோருக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் 1981 ஆம் ஆண்டு 10 குறுந்தொழில் தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்தொழிற்கூடங்கள் அனைத்தும் 1989-ல் அந்தந்தத் தொழில் முனைவோர்களால் கிரயம் செய்யப்பட்டுவிட்டன. மரக் கடசல் தொழில் புரிவோருடைய தேவைகளைக் கேட்டறிவதற்காக 1998 மற்றும் 2000 ஆண்டுகளில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மாவட்ட ஊரகத் தொழில் திட்டங்கள், திருநெல்வேலி திட்டத்தின்கீழ் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. கருத்தரங்குகளின் வெளிப்பாடுகள் நபார்ட் வங்கியின் பரிசீலனையில் உள்ளன. மரக் கடைசல் தொழில் புரிவோருக்கு மாவட்ட தொழில் மையம் வழியாக குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு குறைந்த மின் கட்டணச் சலுகை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மரக் கடசல் தொழில் புரிய பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற விண்ணப்பம் செய்பவர்கள் கடன் பெறுவதற்காக அவை வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகின்றன. மேலும் டாக்டர் புரட்சித் தலைவி தலைமையிலே அமைந்துள்ள தமிழக அரசு சிறு மற்றும் குறுந்தொழில் புரிவோருக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அத்தொழில்கள் நலிவடையாமல் இருக்க அனைத்துப் பாதுகாப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 183, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

183—

கால்நடை மருந்தகம்

***8849—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002 ஏப்ரல் 19]

ராணிப்பேட்டை தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், தூதிரெட்டிப்பள்ளி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரிய நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 184, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

184—

வாரிசுதாரர்களுக்குப் பணி

***7805—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி எல்லைப் போராட்ட வீரர்களில், மறைந்துவிட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணி வேண்டி இதுவரையில் அரசுக்கு வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதுவரையில் அரசுப் பணியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: தாயை வணங்கி விடையளிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருத்தணி எல்லைப் போராட்ட வீரர்களில் மறைந்துவிட்ட தியாகிகளின் வாரிசுதாரர்கள் எவரும் அரசுப் பணி வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இதுவரை பதிவு செய்யவில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS